# வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்
# முதலாம் தவணைப் பரீட்சை – 2020

**பாடம்:- வரலாறு**

சுட்டெண்:....................... **தரம் – 06** **நேரம் : 2 மணி**

## பகுதி - I

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. மகாவிகாரையைச் சேர்ந்த மகாநாமதேரர் என்ற ஆசிரியரால் எழுதப்பட்ட இலக்கிய மூலாதாரமாகக் கருதப்படுவது
   1. தீபவம்சம் 2. ரகுவம்சம் 3. மகாவம்சம் 4. போதிவம்சம்

2. “கீழைத் தேசங்களின் தானியக் களஞ்சியம்” எனச் சிறப்பிக்கப்படும் நாடு
   1. இந்தியா 2. இலங்கை 3. இத்தாலி 4. இஸ்ரேல்

3. மின்னேரியாக் குளத்தைக் கட்டுவித்த இலங்கையின் ஆட்சியாளன் யார்?
   1. மகாசேனன் 2. தாதுசேனன் 3. வசப மன்னன் 4. வலகம்பா மன்னன்

4. புத்தர் பெருமான் பரிநிர்வாணம் அடைந்ததைக் குறிப்பிடும் சரியான புத்த வருடம் யாது?
   1. புத்தவருடம் 4 2. புத்தவருடம் 3 3. புத்தவருடம் 2 4. புத்தவருடம் 1

5. பூமியில் முதலில் தோன்றிய கண்ணுக்குத் தொரியாத அளவிற் சிறிய உயிரினமாகக் கருதப்படுவது
   1. ஒபபீயா 2. புரோகாயோட் பக்றீரியா
   3. மர அட்டை 4. மெமத் யானைகள்

6. “ஆற்றுலுடைய மனிதன்” எனச் சிறப்பிக்கப்படும் மனித இனமாகக் கொள்ளப்படுவது
   1. வேறாமோ இரெக்டஸ் 2. வேறாமோ நியண்டதாலன்சிஸ்
   3. வேறாமோ ஹெபிலஸ் 4. வேறாமோ செபியன்

7. மனிதனின் கலாச்சார வளர்ச்சியின் மூன்று முக்கிய கட்டங்களுள் அடங்காதது
   1. பழைய கற்காலம் 2. தகவல் தொழில் நுட்ப காலம்
   3. இடைக்காலம் 4. புதிய கற்காலம்

8. பொதுவாக இடைக்கற்காலம் ஆரம்பமான கால கட்டமாகக் கருதப்படுவது
   1. இற்றைக்கு 2000 இற்கும் 1800 இற்கும் இடையில்
   2. இற்றைக்கு 15 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்
   3. இற்றைக்கு 1000 இற்கும் 3000 இற்கும் இடையில்
   4. இற்றைக்கு 20 000 இற்கும் 18 000 இற்கும் இடையில்

9. நெற்செய்கை முதல் முதலில் ஆரம்பமான நாடாகக் கருதப்படுவது
   1. சீனா 2. மத்திய தரைக்கடல் நாடுகள்
   3. மத்திய மெக்சிக்கோ 4. இந்தியா

10. இந்தியாவில் வாழும் ஹோமோசேபின் இனமாகக் கருதப்படுவது

1. மொங்கோலொயிட்  2. கொக்கசொயிட்
3. நீக்ரொயிட்  4. ஒஸ்ரிலொயிட்

(10x 2= 20 புள்ளிகள்)

**02. தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. களிமண் அரிவாள் | மதீனா |
| 2. புதியகற்காலம் | தொல்பொருள் மூலாதாரம் |
| 3. நெருப்பு | இஸ்ரேல் |
| 4. முகம்மதுநபி | குரக்கன் |
| 5. மனித எலும்புக்கூடு | இஸ்ரவேல் |

(5x 2= 10 புள்ளிகள்)

**03. கீறிட்ட இடம் நிரப்புக.**

1. பொலநறுவைக் கல் விகாரையை ...................... மன்னன் நிர்மாணித்தான்
2. கி . பி 78 ஆம் ஆண்டு ...................... முறை ஆரம்பமாகியது
3. பாதங்கள் பலவற்றைக் கொண்ட மரவட்டை ...................... யுகத்தில் தோன்றியது
4. யப்பானில் .................. எரிமலை காணப்படுகிறது
5. மெமத்யானைகள் ..................... காலத்தில் பூமியில் வாழ்ந்தன.

(பெரும்பனியுகம், சிலூரியன் யுகம், 1ஆம் பராக்கிரமபாகு, ஹிஸ்ரிஆண்டு, 2ஆம் பராக்கிரமபாகு, சாலிவாகன சகாப்தமுறை, பெலியோசொயிக்யுகம், மக்னா, கற்காலம், சுகுரஜிமா)

(5x 2= 10 புள்ளிகள்)

## பகுதி - II

**முதலாம் வினா கட்டாயமானது ஏனைய 5 வினாக்களுள் 4 வினாக்களுக்கு விடை எழுதுக.**
**மொத்தமாக 5 வினாக்களுக்கு விடைதருக.**

**01.**

1.



உரு (அ)

1. உரு (அ) என பெயரிடப்பட்ட படம் எதனைக் குறிக்கிறது? (2புள்ளி)
2. இவ்வுயிரினத்தின் சுவடு எந்த நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது? (2புள்ளி)
3. இவ் உயிரினம் எங்கு வாழ்ந்ததாக அறியப்படுகிறது? (2புள்ளி)



உரு (ஆ)

1. உரு (ஆ) என பெயரிடப்பட்ட படம் எதனைக் குறிக்கிறது? (2புள்ளி)
2. இதனைப் பயன்படுத்திய மனித இனம் எது? (2புள்ளி)
3. இவ்வுரு எதனால் செய்யப்பட்டது? (2புள்ளி)

**02.**

1. நீர் வகுப்பறையில் செய்த கணிப்பீடு ஒன்றைக் குறிப்பிடுக.
2. அக்கணிப்பீட்டுக்கு நீர் பயன்படுத்திய பொருட்கள் 03 தருக.
3. அக்கணிப்பீட்டின் மூலம் நீர் அடைந்து கொண்ட நன்மைகள் 03 தருக.
4. அக்கணிப்பீட்டினைச் செய்யும் போது நீர் எதிர்கொண்ட சவால்கள் 03 தருக.

(4x3= 12புள்ளிகள்)

**03.**

1. வரலாறு என்றால் என்ன?
2. வரலாற்றைக் கற்பதற்கு பயன்படும் வரலாற்று மூலாதாரங்களின் இரு வகைகளும் எவை?
3. வரலாற்றுக் காலத்தை அளவிடும் இரு எளிய முறைகளும் எவை?
4. புத்த வருடம் எப்போதிலிருந்து கணிக்கப்படுகிறது?

(4x3= 12புள்ளிகள்)

**04.**

1. புவியின் நடுப்பகுதி வெப்பநிலை யாது?
2. மானிடப் பரிணாமம் என்றால் என்ன?
3. மானிடப் பரிணாமத்தின் 5 மனித நிலைகளும் எவை?
4. எலும்புகளைக் கொண்டு வீடு அமைத்த மனித இனம் எது?

(2+3+5+2= 12புள்ளிகள்)

**05.**

1. கலாச்சார மாற்றம் என்றால் என்ன?
2. மனிதனின் கலாச்சார வளர்ச்சியின் 3 முக்கிய கட்டங்களும் எவை?
3. பழைய கற்காலத்தில் மனிதனால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பான பண்பு ஒன்று தருக.
4. இடைக்கற்கால மனிதன் வேட்டையாடுவதற்குப் பயன்படுத்திய பொருட்கள் 02 தருக.

(2+6+2+2= 12புள்ளிகள்)

**06.**

1. புதிய கற்கால மனிதன் பயிரிட்ட பயிர்கள் 4 தருக.
2. பின்வரும் இடங்களில் முதன் முதலில் பயிரிடப்பட்ட பயிர்கள் யாவை?
   1. மத்திய மெக்கிக்கோ
   2. மத்திய தரைக்கடல்

3. வேறாமோ சேபியன் மனித இனத்தின் நான்கு மனித முகப்பிரிவுகளும் எவை?

(4x3= 12புள்ளிகள்)